**செய்தி வெளியீடு எண்:154** **நாள்:23.02.2021**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று (23.2.2021) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் 6 கோடியே 48 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலக வளாகக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், விருதுநகர், திருவண்ணாமலை, மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் 30 கோடியே 13 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒரு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலக வளாகக் கட்டடம் மற்றும் 11 பாலங்கள் ஆகியவற்றையும் திறந்து வைத்தார்கள்.

மாவட்ட அளவில் கிராமங்களுக்குத் தேவையான அனைத்து வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்தும் அலகாகவும், ஒன்றிய அளவில் உள்ள அலுவலர்களுக்கு பயிற்சி அளிப்பது, ஆய்வுக் கூட்டங்கள் நடத்துவது போன்ற பணிகளை மேற்கொள்ளும் அலுவலகமாகவும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை விளங்குகிறது. தமிழ்நாட்டில் பெரும்பாலான மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகங்கள் போதிய இடவசதி இல்லாமல் சிறிய கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

அதனைக் கருத்தில் கொண்டு, 2017–2018 மற்றும் 2018–19ஆம் ஆண்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கையில், ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் மாவட்ட அளவிலான பல்வேறு அலுவலகங்களை ஒருங்கிணைத்து, விருதுநகர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலக வளாகங்கள் கட்டப்படும் என்று தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில், 28,716 சதுர அடி கட்டட பரப்பளவில், தரை மற்றும் முதல் தளத்துடன் 6 கோடியே 48 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலக வளாகக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

மேலும், விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் 28,716 சதுர அடி கட்டட பரப்பளவில், தரை மற்றும் முதல் தளத்துடன் 6 கோடியே
14 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலக வளாகக் கட்டடம்;

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி ஊராட்சி ஒன்றியம், கல்பூண்டி ஊராட்சி, கல்பூண்டி – லாடப்பாடி சாலையில் கமண்டல நாகநதியின் குறுக்கே 5 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் ஊராட்சி ஒன்றியம், கப்பூர் ஊராட்சி, வள்ளவராயன் குப்பம் சாலையில், வீரசோழன் ஆற்றின் குறுக்கே 1 கோடியே 62 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

நாகப்பட்டினம் மாவட்டம், தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியம், கொத்தங்குடி ஊராட்சி, கொத்தங்குடி – சித்தாய்மூர் சாலையில் வீரசோழன் ஆற்றின் குறுக்கே 1 கோடியே 69 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; சித்தாய்மூர் ஊராட்சி, சித்தாய்மூர் – கீரம்பேர் சாலையில் அரிச்சந்திரா ஆற்றின் குறுக்கே 2 கோடியே 73 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; வெள்ளப்பள்ளம் ஊராட்சி, வெள்ளப்பள்ளம் – நாலுவேதபதி சாலையில் நல்லாற்றின் குறுக்கே 2 கோடியே 12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியம், ஆதனூர் ஊராட்சி, ஆதனூர் ஊராட்சி சாலையில் மாணங்கொண்டான் ஆற்றின் குறுக்கே 2 கோடியே 52 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; கரியாப்பட்டினம் ஊராட்சி, செம்பியமணக்குடி – கரியாப்பட்டினம் - செண்பகராயநல்லூர் சாலையில் மனக்காட்டான் ஆற்றின் குறுக்கே 1 கோடியே 12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; நாகக்குடையான் ஊராட்சி, நாகக்குடையான் – கள்ளிமேடு சாலையில் ஈரவாய்க்கால் ஆற்றின் குறுக்கே 1 கோடியே 46 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; பஞ்சநதிக்குளம் கிழக்கு ஊராட்சி, நடேசதேவர் கடையடி – பஞ்சநதிக்குளம் கிழக்கு சாலையில் மாணங்கொண்டான் ஆற்றின் குறுக்கே 2 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; பஞ்சநதிக்குளம் மேற்கு ஊராட்சி, மருதூர் தெற்கு – பஞ்சநதிக்குளம் மேற்கு சாலையில் மாணங்கொண்டான் ஆற்றின் குறுக்கே 1 கோடியே

40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம் மற்றும் தகட்டூர் ஊராட்சி, தகட்டூர் – சூரியன்காடு சாலையில் முள்ளி ஆற்றின் குறுக்கே 1 கோடியே 68 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

என மொத்தம் 36 கோடியே 61 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் மற்றும் பாலங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

சுய உதவிக் குழுக்களுக்கிடையே சிறந்த நிர்வாகம் மற்றும் சமூக விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்காக மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் சிறப்பாக செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு விருதுகள் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகின்றன. மாநில அளவில் சிறந்த சுய உதவிக் குழுக்களுக்கான விருதுடன் தலா 1 லட்சம் ரூபாய்க்கான காசோலை மற்றும் சான்றிதழும், சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு விருதுடன் தலா 3 லட்சம் ரூபாய்க்கான காசோலை மற்றும் சான்றிதழும் வழங்கப்படும்.

அந்த வகையில், 2013–14 முதல் 2016–17ஆம் ஆண்டுகளுக்கான மாநில அளவிலான சிறந்த சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கான விருதுகளை கீழ்க்காணும் 8 சுய உதவிக் குழுக்கள் மற்றும் 4 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று வழங்கினார்கள்.

**மாநில அளவில் சிறந்த சுய உதவிக் குழுக்கள்**

| வ. எண் | ஆண்டு | மாவட்டம் | சுய உதவிக் குழுக்களின் பெயர் |
|---|---|---|---|
| 1 | 2013–14 | திண்டுக்கல் | அன்னை |
| 2 | 2013–14 | திருவள்ளூர் | ஜான்சிராணி மகளிர் மன்றம் |
| 3 | 2014–15 | கோயம்புத்தூர் | மயில் |
| 4 | 2014–15 | காஞ்சிபுரம் | பூவிதழ்கள் |
| 5 | 2015–16 | கன்னியாகுமரி | இளந்தென்றல் |
| 6 | 2015–16 | நாமக்கல் | குப்பிச்சிபாளையம் மகளிர் முன்னேற்ற சுய உதவிக்குழு |
| 7 | 2016–17 | விருதுநகர் | ஜீவக்கல் விழிகள் |
| 8 | 2016–17 | மதுரை | முனியாண்டி |

<u>சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு</u>

| வ. எண் | ஆண்டு | மாவட்டம் | ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் பெயர் |
|---|---|---|---|
| 1 | 2013–14 | நீலகிரி | கக்குச்சி |
| 2 | 2014–15 | தூத்துக்குடி | கட்டாளங்குளம் |
| 3 | 2015–16 | நாகப்பட்டினம் | காளகஸ்தினாதபுரம் |
| 4 | 2016–17 | திருவண்ணாமலை | நா. கெங்கபட்டு |

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி, மாண்புமிகு கதர் மற்றும் கிராம தொழில் வாரியத் துறை அமைச்சர் திரு.ஜி. பாஸ்கரன், தலைமைச் செயலாளர் முனைவர் ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் டாக்டர் கே.எஸ். பழனிசாமி, இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் முனைவர் J.U. சந்திரகலா, இ.ஆ.ப., மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**